www.tamilarangam.net

# கண்ணீரால் காத்தோம் - யாரும்

# கருக்கச் சம்மதியோம்.

ஈழம் முழுவதிலுமுள்ள ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் முகாம்கள் மீது புலிகள் இயக்கத்தினரால் கடந்த 13-12-86 சனிக்கிழமை படுகொலை முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டன.
இறுதியாக கிடைத்த செய்திகளின்படி இவ் வெறிச் செயல்கள் காரணமாக

* மொத்தத்தில் 61 ஈழப் போராளிகளின் உயிர்கள் அநியாயமாகப் பறிக்கப்பட்டுள்ளன.

* 19 பேர் மக்கள் விடுதலைப் படையைச் சேர்ந்தவர்கள்,

* பதவி வெறியர்களால் தவறாக வழிநடத்தப்பட்ட 42 புலி இயக்கப் போராளிகளும் பலியாகியுள்ளனர்.

* 26 LTTE இயக்கப் போராளிகள், இச் சுயநலக் கும்பல்களின் அராஜகப் போக்கினை இனம் கண்டு அவர்களை நிராகரித்து EPRLF இடம் சரணடைந்துள்ளனர்.

* 46 EPRLF போராளிகளை அராஜகவாதிகள் கடத்திச் சென்றுள்ளனர்.

ஈழத்தில் இன்றுள்ள உண்மை நிலை என்ன?

ஈழத் தேசிய விடுதலைப்போராட்டத்தின் நண்பர்கள் யார்? பகைவர்கள் யார்? என்பது பற்றி எதுவித தெளிவும் இல்லாமை, தேசிய விடுதலைப் போராட்டத்திற்கான சரியான அரசியல் திட்டம் இல்லாமை, இவ்வாறான அரசியல் வறுமையாலும், மற்றும் பதவி வெறியாலும் ... உந்தப்பட்டுள்ள சூழ்ச்சி அரசியல் வாதிகளான பாலசிங்கம், பிரபாகரன் கும்பலால் நன்கு திட்டமிடப்பட்டு, முடுக்கி விடப்பட்டுள்ள இத் தாக்குதல்கள் யாழ். குடா நாட்டில் ஒரு சில பகுதிகள் தவிர்ந்த ஏனைய அனைத்து இடங்களிலும் முறியடிக்கப்பட்டுள்ளன.

சூழ்ச்சி அரசியல் தலைமையினால் வழி நடத்தப்பட்டுவரும் இப் போராளிகளுடன் நேரடி மோதலில் ஈடுபடுவதன் மூலம் இரத்தக்களரி ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கும், எமது தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு ஏற்படக்கூடிய நட்டங்களை மனதிற்கொண்டும், EPRLF இன் ஆயுதப் பிரிவான மக்கள் விடுதலைப் படையின் பெரும் பகுதியினரை தற்காலிகமாக பின்வாங்கியிருக்கும்படியும், தற்காப்பு நடவடிக்கைகளில் மட்டும் ஈடுபடும்படியும், எமது தலைமை அறிவுறுத்தியுள்ளது.

ஏனைய அனைத்துப் பிராந்தியங்களிலும் எஞ்சியிருக்கும் புலி இயக்கத்தினர் பெரும்பாலும் செயற்பாடற்ற விரக்தி நிலையில் இருப்பதாகவும், மட்டக்களப்பு மாவட்டத்திற்கு புதிதாக அனுப்பப்பட்டுள்ள சில புலிகள் சில மோதல்களை உருவாக்க முனைவதாகவும் உயிர்ச் சேதம் எதுவுமின்றி தற்காலிகமாக இவர்களை நிராயுதபாணிகளாக்கி ஒரு கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர மக்கள் விடுதலைப்படையினரால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பல காலமாக நன்கு திட்டமிடப்பட்டு புலிகளால் மேற்கொள்ளப்பட்ட இவ் அழிப்பு முயற்சி பற்றி வழமைபோல் பொய்ப் பிரச்சாரங்களை வெளிநாடுகளில் கட்டவிழ்த்து வருகின்றனர். வெளிநாடுகளில் வாழும் எமது மக்களை அறிவிலிகள் என எண்ணி, இவர்கள் பரப்பிவரும் விடுகதைகளின் உண்மைத் தன்மையினை மக்கள் உணர்வார்கள் என நாம் நம்புகிறோம்.
யாழ். குடாநாட்டுக்குள் நாம் தற்காலிகமாக பின்வாங்கியிருப்பதற்கான காரணங்களில் மிக முக்கியமானது அரசியல் ரீதியாக புலிகளின் அராஜகப் போக்கினையும், அதிலுள்ள ஜனநாயக விரோத அம்சங்களையும், பரந்துபட்ட ஈழ மக்கள் மத்தியில் அம்பலப்படுத்துவதற்கும், அதேவேளையில் ஈழத்தில் இன்றுள்ள அரசியல் சக்திகளில், முற்போக்கு ஜனநாயக சக்திகள் எவை? சந்தர்ப்ப வாத பிற்போக்கு சக்திகள் எவை? என்பதை சிந்திக்கும் மக்கள் இனம் காண்பதற்கும், இது ஒரு நல்ல சந்தர்ப்பமாக அமையுமென நாம் கருதுகிறோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இன்றைய நிலையில் சுடாநாட்டில் மக்களோடு புலிகள் எனப் புலம்பும் இவர்கள் எமது அரசியற் பிரிவு தோழர்களையும், மற்றும் வெகுஜன அமைப்புகளைது அதாவது அன்னையர் முன்னணி, ஈழ பெண்கள் விடுதலை முன்னணி, பல்கலைக்கழக மாணவர் அவை போன்றவற்றையும் தடைசெய்து தமது சர்வாதிகார வெறித்தனத்தை மக்கள் மேல் ஏவி வருகின்றனர். அத்துடன் ஈழப் பெண்கள் விடுதலை முன்னணிச் செயலாளரும், 'செந்தணல்' பத்திரிகை ஆசிரியையுமான தோழியர் அஞ்சலியை கடத்திச் சென்று தமது முகாமில் வைத்து சித்திரவதை செய்து வருகின்றனர். மாணவர் தலைவர்கள் பலரை கடத்திச்சென்று படுகொலையும் செய்துள்ளனர். யாழ். நகர வீதிகளில் ஒலிபெருக்கி பூட்டப்பட்ட வாகனங்களில் இவற்றை சாதனைகளென வர்ணித்து, இவற்றை வெற்றிச் செய்திகள் என அறிவித்து வருகின்றனர். இதனை வீடியோ படங்களாக எடுத்து வெளிநாட்டுத் தமிழர்களுக்கு சமப்பிக்கவும் ஏற்பாடு செய்துவருகின்றனர்.

சக போராளிகளைக் கொல்லும் புலிகள் இயக்கத்தின் இன்றைய தலைமையின் அரசியல் வறுமையால் ஈழ விடுதலைக்காகப் போராடும் தன்மையை இழந்து, வெளிநாட்டுச் சதிக் கும்பல்களின் கைப் பொம்மையாகிவிட்டது. இவர்களது செயற்பாடுகள் இதனை உர்ஜிதப்படுத்துகின்றன. ஈழ தேசத்தின் இன்றைய நெருக்கடியான நிலையில் புலிகள் மேற்கொள்ளும் இந் நடவடிக்கை ஒரு தேச விரோத நடவடிக்கை என்பதனை தெளிவாக கூறிவைக்க விரும்புகிறோம்.

எமது மக்களை அடக்குமுறையிலிருந்து விடுவிக்கப் புறப்பட்ட நாம் அராஜகத்திற்கு எதிராக இறுதி வெற்றிவரை போராட தீர்மானித்துள்ளோம்.

எமது தேசம் அழிந்தாலும் பரவாயில்லை, தமது பதவி வெறியே முதன்மையானது எனக் கருதும் இவர்கள், ஜனநாயக சக்தியான எம்மீது நன்கு திட்டமிட்ட வகையில் தொடுத்துள்ள இவ் ஆக்கிரமிப்பு யுத்தத்தினை முடிவுக்கு கொண்டுவருவதுடன் நிற்காது மீண்டும் ஒருமுறை எமது பாசமிகு மண்ணில் ஈழப் போராளிகளின் இரத்தம், இயக்க அராஜகத்தால் சிந்தப்படாதிருப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுவோம் என தேசப்பற்றுள்ள மக்களுக்கு உறுதியாக கூறிவைக்க விரும்புகின்றோம்.

"சமாதானத்தின் பகைவர்களை நிர்மூலம் செய்வோம்

சமதர்ம ஈழத்தை நிர்மாணம் செய்வோம்."

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி

லண்டன்

18-12-1986.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்